**மகளிர் தினம்! 08-03-2023**

மேவிய வாழ்வின் கலங்கள் சிறந்திட,
பூவினும் இனிதாய் புதுமைகள் செறிந்து,
தாயுமாய் தங்கையாய், தரனிசீர் மகளுமாய்,
யாவிலும் நிறைந்து, அறிவாய் அன்பாய்,

கடிவாளம் கொண்டு பிடிவாதம் இன்றி,
அடிக்காமல் அணைக்கும் அன்னை; தமக்கை,
மடியினில் தாங்கி மலர்க்கரம் கொண்டு,
துடிப்பான வாழ்வில் துணையாவது பெண்மை!

வரையின்றி அன்புடன் ஆளுமை நடத்தும்,
திரையின் பின்னால் இல்லக் கிழத்தியாய்,
வரையறை யாவிலும் அறிவுறை தந்தே,
நரைதிரை மூப்பினில் நாமிருந்தாலும்,

அணைத்து மகிழும் ஆனந்த உறவாய்,
பிணைந்த உறவே யாவிலும் சிறக்க,
இணைந்த வாழ்வின் இன்னல்கள் தீர,
மனையறம் கண்டதின் மகிழ்ச்சி ததும்ப,

பெயர்த்தி என்றொரு பெருமையும் இருந்தால்,
உயர்த்திப் பிடிக்க ஒவ்வொரு துளியிலும்,
அயர்ந்து போகாது ஆனந்தம் பிறந்திட,
உயர்ந்து நிறைவது பெண்மையின் வடிவே!

**அன்பின்சீர் அனைவருக்கும் இனிய மகளிர் தின வாழ்த்து!**

அன்புடன்,

**கு.ப. அசோகன்** (கவிவளவன்) 08-03-2023(காலை மணி 07-30)